# ஆகஸ்ட்– 17 – வெள்ளி
## புனித மொன்ரபெல்கோ கிளாறா
## “கடவுள் இணைத்ததை மனிதர் பிரிக்காதிருக்கட்டும்”
## (மத் 19:6)

**முதல் வாசகம் : ஏசேக்கியல்16 : 1 – 15, 60. 63**

ஆண்டவரின் வாக்கு எனக்கு அருளப்பட்டது. மானிடா! எருசலேமுக்கு அதன் அருவருப்புகளைச் சுட்டிக்காட்டு.நீ சொல் தலைவராகிய ஆண்டவர் எருசலேமுக்குக் கூறுவது இதுவே. நீ தோன்றியதும் பிறந்ததும் கானான் நாட்டிலே, உன் தந்தை ஓர் எமோரியன். உன் தாய் ஓர் இத்தியள். நீ பிறந்த வரலாறு இதுவே. பிறந்த அன்று உன் கொப்பூழ்க் கொடி அறுக்கப்படவில்லை. நீ நீராட்டப்பட்டுத் தூய்மையாக்கப் படவில்லை. உப்பு நீரால் கழுவப்படவில்லை. துணிகளால் சுற்றப்படவுமில்லை. உன்னை இரக்கத்துடன் கண்ணோக்கி உனக்காக வருந்தி, இவற்றுள் ஒன்றையேனும் உனக்குச் செய்வாரில்லை. ஆனால் நீ திறந்த வெளியில் எறியப்பட்டாய் ஏனெனில் நீ பிறந்த நாளிலேயே வெறுத்து ஒதுக்கப்பட்டாய்.அவ்வழியாய்க் கடந்துபோன நான் உன்னருகில் வந்து உன் இரத்தத்தில் நீ புரள்வதைக் கண்டு, இரத்தத்தில் கிடந்த உன்னை நோக்கி, ”வாழ்ந்திடு” என்றேன். ஆம், இரத்தத்தில் கிடந்த உன்னை நோக்கி, ”வாழ்ந்திடு” என்றேன். உன்னை வயல் வெளியில் வளரும் பயிர்போல் உருவாக்கினேன். நீ வளர்ந்து பருவமெய்தி அழகிய மங்கையானாய். உன் கொங்கைகள் உருப்பெற்றன. உன் கூந்தலும் நீண்டு வளர்ந்தது. ஆயினும் நீ ஆடையின்றித் திறந்த மேனியளாய் நின்றாய். அவ்வழியாய்க் கடந்துபோன நான் உன்னை நோக்கினேன். அப்போது நீ காதற் பருவத்தில் இருந்தாய். நான் என் ஆடையை உன்மேல் விரித்து உன் திறந்தமேனியை மூடினேன். உனக்கு உறுதிமொழி தந்து, உன்னோடு உடன்படிக்கை செய்தேன். நீயும் என்னுடையவள் ஆனாய், என்கிறார் தலைவராகிய ஆண்டவர்.நான் உன்னை நீராட்டி, உன் மேலிருந்த இரத்தத்தைக் கழுவித் துடைத்து, உனக்கு எண்ணெய் பூசினேன்.பூப்பின்னல் உடையால் உன்னை உடுத்தி, தோல் காலணிகளை உனக்கு மாட்டி, மெல்லிய துகிலை உனக்கு அணிவித்து, நார்ப்பட்டால் உன்னைப் போர்த்தினேன். ஆணிகலன் களால் உன்னை அழகு செய்தேன் கைகளுக்குக் காப்புகளும் கழுத்திற்குச் சங்கிலியும் இட்டேன்.மூக்குக்கு மூக்குத்தியும், காதுகளுக்குத் தோடுகளும், தலையில் அழகிய மணிமுடியும் அணிவித்தேன்.பொன்னாலும், வெள்ளியாலும், நீ அணிசெய்யப்பட்டாய். நார்ப்பட்டும் மெல்லிய துகிலும், பூப்பின்னல் ஆடையும் உன் உடைகள் ஆயின. மாவும், தேனும், எண்ணெயும் உன் உணவாயின. நீ மிக மிக அழகு வாய்ந்தவளாகி, அரச தகுதி பெற்றாய்.உன் அழகின் காரணமாக உன் புகழ் வேற்றினத்தாரிடையே பரவிற்று. என் மாட்சி உன்மேல்பட உன் அழகு நிறைவுற்று விளங்கிற்று, என்கிறார் தலைவராகிய ஆண்டவர். நீயோ உன் அழகில் நம்பிக்கை வைத்து, உன் புகழைப் பணயமாக வைத்து, விலைமகளாகி, வருவோர் போவோரிடமெல்லாம் வேசித்தனம் செய்தாய்.ஆயினும் உன் இளமையின் நாள்களில் உன்னோடு செய்த உடன்படிக்கையை நினைவு கூர்ந்து, என்றுமுள உடன்படிக்கையை உன்னோடு செய்வேன்.நீ செய்ததையெல்லாம் நான் மறைத்திடும்போது, நீ அவற்றையெல்லாம் நினைத்து வெட்கி, இழிவு மிகுதியினால் உன் வாயை ஒருபோதும் திறக்கமாட்டாய், என்கிறார் தலைவராகிய ஆண்டவர்.

**பதில்பாடல் :** ஆண்டவரே உம் சினம் தணிந்து எனக்கு
ஆறுதல் அளித்துள்ளீர்.

**நற்செய்தி : மத்தேயு19 : 3 – 12**

அக்காலவத்தில் பரிசேயர் அவரை அணுகி, அவரைச் சோதிக்கும் நோக்குடன், ”ஒருவர் தம் மனைவியை எக்காரணத்தையாவது முன்னிட்டு விலக்கிவிடுவது முறையா?” என்று கேட்டனர்.அவர் மறுமொழியாக, ”படைப்பின் தொடக்கத்திலேயே கடவுள்” ஆணும் பெண்ணுமாக அவர்களைப் படைத்தார்” என்று நீங்கள் மறைநூலில் வாசித்ததில்லையா?” என்று கேட்டார்.மேலும் அவர், ”இதனால் கணவன் தன் தாய் தந்தையை விட்டுவிட்டுத் தன் மனைவியுடன் ஒன்றித்திருப்பான். இருவரும் ஒரே உடலாய் இருப்பர்.இனி அவர்கள் இருவர் அல்ல் ஒரே உடல். எனவே கடவுள் இணைத்ததை மனிதர் பிரிக்காதிருக்கட்டும். ”என்றார்.அவர்கள் அவரைப் பார்த்து, ”அப்படியானால் மணவிலக்குச் சான்றிதழைக் கொடுத்து மனைவியை விலக்கிவிடலாம் என்று மோசே கட்டளையிட்டது ஏன்?” என்றார்கள்.அதற்கு அவர்” உங்கள் கடின உள்ளத்தின் பொருட்டே உங்கள் மனைவியரை விலக்கிவிடலாம் என்று மோசே உங்களுக்கு அனுமதி அளித்தார். ஆனால் தொடக்கமுதல் அவ்வாறு இல்லை.பரத்தைமையில் ஈடுபட்டதற்காக அன்றி வேறு எக்காரணத்தையாவது முன்னிட்டுத் தன் மனைவியை விலக்கிவிட்டு வேறொரு பெண்ணை மணப்பவன் எவனும் விபசாரம் செய்கிறான் என நான் உங்களுக்குச் சொல்கிறேன்”என்றார்.அவருடைய சீடர்கள் அவரை நோக்கி, ”கணவர் மனைவியர் உறவு நிலை இத்தகையது என்றால் திருமணம் செய்து கொள்ளாதிருப்பதே நல்லது” என்றார்கள்.அதற்கு அவர், ”அருள்கொடை பெற்றவரன்றி வேறு எவரும் இக்கூற்றை ஏற்றுக் கொள்ள முடியாது.சிலர் பிறவியிலேயே மண உறவு கொள்ள முடியாதவராய் இருக்கின்றனர். வேறு சிலர் மனிதரால் அந்நிலைக்கு ஆளாக்கப்படுகின்றனர். மற்றும் சிலர் விண்ணரசின்பொருட்டு அந்நிலைக்குத் தம்மையே ஆளாக்கிக் கொள்கின்றனர். இதை ஏற்றுக்கொள்ளக் கூடியவர் ஏற்றுக்கொள்ளட்டும்” என்றார்.

**தியானம்:** திருமணம் சொற்கத்தில் நிற்சயிக்கப் படுகின்றது என்பார்கள். ஆனால் இன்று அது பல வழிகளில் நிற்சயிக்கப் படுகின்றது. நிலைத்து நிற்கின்ற திருமணங்கள் எத்தனை? விவாகரத்தும் மண முறிவுகளும் ஏராளம். விட்டுக்கொடுக்க முடியாமல், ஈகோவை விட முடியாமல் , மன்னிக்க முடியாமல் முறிந்து போகின்றது திருமணம். இரு மனங்களின் சங்கமம்தான் திருமணம். ஆனால் இன்று அது இரு உடல்களின் சங்கமமாகத்தான் பார்க்கப் படுகின்றது. பலருடைய வாழ்வில் ஒத்துப்போதல் இல்லை. இதனால் பிள்ளைகளுக்காக, சமூகத்திற்காக இணைந்து வாழ்வதுபோல் நடிப்பவர்கள் ஏராளம். ஒரே வீட்டில் இருந்தும் கதைக்காமல், பகிரமுடியாமல் ஊமைகளாக, அடிமைகளாக வாழ்பவர்களும் உண்டு. பிள்ளைகளின் செயற்பாடுகளால் பிரிந்தவர்களும் உண்டு. கணவனின் ஆண் ஆதிக்கத்தால், போதைப் பழக்கத்தால் நிலை குலைந்த குடும்பங்களும் உண்டு. இதுவா குடும்பம்? இதனையா இறைவன் விரும்புகின்றார்? இன்று நம்மில் எத்தனை பேர் குடும்ப நிலைகளை ஒருவர் மற்றவருடன் பகிர்ந்து கொள்கின்றோம். சேர்ந்து பேசி நல்ல முடிவை எடுக்கின்றோம். தனிப்பட்ட ரீதியில் எடுக்கும் எல்லா முடிவுகளுக்கும் மனைவியோ அல்லது கணவனோ இசைந்து போக வெண்டும் என்று நினைப்பது மடமை. ஆனால் இன்று இதைதான் பலர் செய்கின்றனர். இதனால் மன வேதனைப்பட்டு மன அழுத்தத்திற்கு ஆளாபவர்கள் அதிகம். இந்த நிலை மாற வேண்டும் என்றால். கணவன் மனைவி ஒருவரை ஒருவர் அன்பு செய்ய வேண்டும். விட்டுக்கொடுக்கவும், மன்னிக்கவும் பழக வேண்டும். அப்போதுதான் குடும்பங்கள் நிலைத்து நிற்க முடியும்.